30th October 1957]

Betterment levy

* 35 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have issued orders postponing the collection of betterment levy?

The Hon. Sri M. A. MANICKAVELU : No, Sir.

Sri N. K. PALANISAMI : ஏற்கெனவே தண்ணீர் தீர்வை என்று எக்கர் ஒன்றுக்கு 40 ரூபாய் என்று சட்டம் செய்திருந்தும் இப் போது இவைகளை வசூல் செய்யாமல் இருக்கிறது. ஆகவே சர்க்கார் வேண்டாம் என்று விட்டார்களா ? அல்லது இந்த அபிவிருத்தி வரியை வாங்குவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : சர்க்கார் இந்த அபி விருத்தி வரி வாங்கத்தான் போகிறார்கள். வரியை வசூல் செய்வ தற்கு முன்னால் சில சடங்குகள் செய்தாகவேண்டும். எந்தெந்த இடங் களில் எல்லாம் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்ற கணக்கு வேண்டும், இதைப்பற்றி கூடுதலாக ஆலோசிப்பதற்கு ஒரு ஆலோசனை குழு நியமிக்கவேண்டும். தற்காலமாக எவ்வளவு ரேட் இருக்கவேண்டும் என்று பரிசிலனை செய்தாகவேண்டும். அதன் பிறகு இந்த வரி வசூல் செய்யப்படும்.

Sri K. R. NALLASIVAM : சமீபத்தில் நடந்த பொது தேர்தல் காலத்தில் இந்த அபிவிருத்தி வரி விதிப்பை ஒத்திவைத்திருப்பதாக சில மந்திரிகள் சில இடங்களில் பேசினார்கள். ஒருக்கால் இப்போது இரண்டாவது ஐந்து வருட திட்டத்திற்கு பணம் போதாது என்று நினைத்து இப்பொழுது இந்த வரியை விதிக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரின் உத்தரவு காரணமாக சர்க்கார் இப்போது துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அப்படியொன்றும் துரிதமாக வசூல்செய்துவிட முடியாது. நான் முன்னால் சொன்னபடி சில சடங்குகள் நடந்தாகவேண்டும்.

Sri A. R. SUBBIAH MUDALIAR : (Taken over) எஸ்டேட்டு களில் இந்த வரிவிதிப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதா ? அங்கு இருந்த குளங்களை முன்னால் இருந்த ஜமீன்தார்கள் மராமத்து செய்யாததினால், அதன் பின்னால் சர்க்காருடைய மேற்பார்வையின் பேரில் மராமத்து செய்து அபிவிருத்தி செய்யப்பட்டது. ஆதலால் இந்த அபிவிருத்தி வரியை (பெட்டர்மெண்ட் லெவி) ஜமீன்தார்களிடமே வசூல் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இது ஒரு அலாதியான விஷயம். இதற்கு தனி கேள்வி வேண்டும்.

Sri M. KALYANASUNDARAM : ஸர், மந்திரி அவர்கள் ஒரு ஆலோசனை குழு நியமிக்கப்போவதாக தெரிவித்தார்கள். இந்த குழு இந்த திட்டத்திற்கு என்று மாத்திரமா, அல்லது ஜில்லாக்கள் ஒவ்வொன் றிற்கும் ஒரு ஆலோசனை குழு ஏற்படுத்தப்போகிறார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இதுவும் எப்படி என்று முடிவு செய்யப்படவில்லை.

Sri N. K. PALANISAMI : பெட்டர்மெண்ட் லெவி ஆக்ட் பிரகாரம் அந்த சட்டம் நிறைவேறி இரண்டு வருட காலத்திற்குள் வரியை வாங்கவேண்டுமென்றிருக்கிறது. அதற்கிடையில் சர்க்கார் சில சடங்குகள் செய்தாகவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவைகள் எல்லாம் இந்த காலத்திற்குள் முடிந்துவிடுமா ? அப்படியென்றால் இதை எப்போது வாங் குவதாக உத்தேசம் ?

[30th October 1957

THE HON. SRI M. A. MANICKAVELU: இன்னும் இதில் எந்தெந்த திட்டம் என்று நிச்சயிக்கவில்லை. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவு செய்யப்படும்.

Sri N. K. Palaniswami rose.

MR. SPEAKER : The hon. Member may give notice of a separate question. We will now take up the next question, Question No. 36.

Strikes in textile mills

* 36 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of strikes that took place in textile mills during 1957;

(*b*) the number of conciliation conducted by Labour Officers; and

(*c*) the number of mill owners punished under section 29 of the Industrial Disputes Act during 1957?

THE HON. SRI R. VENKATARAMAN.—(*a*) 83.

(*b*) 58.

(*c*) Nil.

SRI N. K. PALANISAMI : ஏற்கெனவே போன வருஷம் புதுக் கோட்டை கணபதி மில் தகராறில் "அவார்ட்" வெளிவந்து ஒரு வருட காலமாகியும் அதை அங்குள்ள முதலாளிகள் அமுல் செய்யாமல் இருக்கிறார்கள். சமீபத்தில் குன்னூர் பனகல் டீ எஸ்டேட்டிலும் "அவார்ட்" வந்தும் இதுவரை முதலாளிகள் அமல் செய்யவில்லை. அது மாத்திரமல்ல. அங்கிருந்து நூற்றுக்கணக்கான தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கியும் வருகிறார்கள். ஆகவே இந்த நிலைமைகளை சீர்திருத்த ஏன் அந்த முதலாளிகளின்மீது சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேட்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கணபதி மில் சம்பந்தமாக தனி கேள்வி போடவேண்டும். இன்னும் அந்த இடத்தில் வேலைநிறுத்தம், கதவடைப்பு முதலியவை நடந்துகொண்டிருப்பதாக தெரிகிறது. இந்த கேள்வி பஞ்சாலை தொழிற்சாலைகளைப்பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கின்றது. ஆகவே எஸ்டேட்டுகள் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISWAMI PILLAI : இந்த மாதிரியாக அடிக்கடி வேலை நிறுத்தங்கள் தமிழ் நாட்டில் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு அடிப்படையான காரணம் என்ன ? இதற்கான அடிப்படையான காரணங்களை வைத்துக் கொண்டு இவைகளை தடுப்பதற்கு, அதாவது வேலை நிறுத்தங்களை இல்லாமல் ஆக்குவதற்கு சர்க்கார் ஏதாவது முயற்சிகள் எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அடிக்கடி பஞ்சாலை தொழிற் சாலைகளில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுகிறது என்று சொல்லுவது அவ்வளவு சரியல்ல. பிற மாகாணங்களிலுள்ள பஞ்சாலை தொழிற்சாலைகளையும் நமது ராஜ்யத்திலுள்ள தொழிற்சாலைகளையும் ஒப்பிட்டு பார்க்கும் போது நமது ராஜ்யத்தில் அதிகமாக தொழில் அமைதி நிலவி வருகிறது என்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த பிரச்னையில்